11 உரிமைப்பிரச்னே.

உறுப்பினர் திரு. துரை முருகன் பேரவை துணேத் தலேவர் தீர்ப்பை குறை கூறி குறிப்பிட்டது குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணேத் தலேவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளி நடப்புச் செய்திருக்கிறார்கள். அவர்கள் வெளி நடப்புச் செய்யும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களும் மற்ற மெம்பர்களும் துணேத் தலேவருடைய தீர்ப்பை ஆட்சேபித்து துரை முருகன் அவர்கள் ''துணேத் தலேவர் ஒழிக'' என்று குரல் எழுப்பியும் சபையினுடைய நடவடிக்கைகளுக்கு களங்கம் கற்பிக்கின்ற வகையில் நடந்துகொண்டிருக்கிறார். உங்களுடைய தீர்ப்பையும் ஒரு தலேப்பட்சமாக தீர்ப்பு என்று உங்களுடைய தீர்ப்புக்கே அவர் களங்கம் கற்பிக்கிறார். பொதுவாக சபாநாயகருடைய தீர்ப்பையோ அவர்களுடைய உத்தரவுகளேயோ எந்த உறுப்பினரும் விமரிசனம் செய்யக்கூடாது என்று சபை விதிகளிலே இருக்கின்றது. அதை மீறி அவைக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்ற வகையில் அவர்கள் பேசிச் சென்றார்கள். எனவே இதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணேத் தலேவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசிய பேச்சுக்கள், அவையின் நடவடிக்கை பற்றிய அந்த குறிப்புகள் ஆகியவற்றை மாண்புமிகு உறுப்பினர் இராதா அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல் உரிமைப் குழுவிற்கு அனுப்புகிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் துணேத் தலேவரவர்களே சபைத் தலேவருடைய தீர்ப்பை ஆட்சேபித்து பேசக்கூடிய இந்தப் பேச்சுக்களே விதிப்பிரகாரம் தவறு என்பதை எடுத்துக் காட்டி அதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று திரு. இராதா அவர்கள் கேட்டுக்கொண்டது ஒரு மோஷன் ஆக மூவ் பண்ணப்படவில்லே. அதை எழுதிக் கொடுக்கத் தேவையில்லேயா வாயாலே சொன்னலேயே போதுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணேத் தலேவர் : சபைக்கு வெளியே நடந்த நிகழ்ச்சிகளேயும் அல்லது இதற்கு முன்னலே நடந்த நிகழ்ச்சிகளேயும் குறிப்பிட்டுச் சொல்லும்போது எழுதிக்கொடுக்க வேண்டும். ஆனல் சபைக்குள்ளே இதைப்போன்ற பிரச்சினேகள் வரும்போது உடனடியாக உரிமைக்குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்றல் எழுத்து மூலமாக அல்லாமல் வாய்மூலமாகவும் சொல்லலாம். அதை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிற உரிமை சபையினுடைய தலேவருக்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.